**கரைதுறைப்பற்று பிரதேசசபை**
**முல்லைத்தீவு மாவட்டம்**

------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 29 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 23 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கரைத்துறைப்பற்று பிரதேசசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக்கொள்கைகளுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

சபையின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போதும் இவற்றினை சமர்ப்பிக்கும் போதும் பின்பற்றப்பட்டிருந்திருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த 90 எண்ணிக்கையான இயந்திர உபகரணங்களின் பெறுமதிகள் 06 வருடங்களுக்கு மேலாக மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த 100 எண்ணிக்கையான தளபாட மற்றும் உபகரணங்களின் பெறுமதிகள் 06 வருடங்களுக்கு மேலாக மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் ரூபா 122,230 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 05 தளபாடங்களின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் ரூபா 165,300 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 14 உருக்கு அலுமாரிகளின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களுக்கு ரூபா 49,650 ஆகக் கொண்டுவரப்பட்டிருந்தமையால் நிதிக்கூற்றுக்களில் தளபாடங்களின் பெறுமதி ரூபா 115,650 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் முடிவுறுத்தப்பட்டிருக்க வேண்டிய ரூபா 9,500,000 பெறுமதியான மூலதன வேலைத்திட்டமொன்று முடிவுறுத்தப்பட்டிராது கொடுப்பனவுத் தொகையானது சில்லறைக் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன் இது மீளாய்வாண்டின் மூலதன செலவினையும் மிகைப்படுத்தியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெறப்படவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

கீழ்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) சந்தைக்கடை குத்தகை தொடர்பாக நிலுவை அறவீடு ரூபா 172,084 ஆன தொகை கடந்த 04 வருடங்களாக அறவீடு செய்யப்படாமல் நிலுவையாகக் காட்டப்பட்டு வந்திருந்தது.

(ஆ) சபையிலிருந்து இளைப்பாறி, இறந்த, இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலர்களது பதவியினர் கடன் நிலுவை கூட்டு மொத்தம் ரூபா 879,987 கடந்த 05 தொடக்கம் 09 வருடங்களுக்கு மேலாக அறவீடு செய்வதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளெவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைக்கான பின்வரும் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்படட்டிருந்தன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிர்வாக ஒழுங்கு விதிகள் | |
| (i) அத்தியாயம் III விதி 33 | சோலைவரி சம்பந்தமான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்வில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதி | |
| (i) இலக்கம் 571 | கூட்டுமொத்தம் ரூபா 2,607,450 பெறுமதியான 05 வகையான 23 தனித்தனியான வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காது கடந்த 10 மாதங்கள் தொடக்கம் 03 வருடங்களாக வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டி கைநூல் | |

(i) பிரிவு 5.4.12 — பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) சபையினால் செலுத்தப்பட்டபின்னர் அதன் விபரங்கள் அடுத்து வரும் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கும் அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்பப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி 2016 டிசம்பர் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகை ரூபா 31,623,236 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும்போது நேரொப்பான முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகை ரூபா 29,151,362 ஆகவும் விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 2,471,874 ஆல் அதிகரித்திருந்தமையைக் காட்டுகிறது. மீண்டுவரும் மானியங்கள் மற்றும் மீண்டுவரும் வருமானங்கள் என்பவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு இதற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

### 2.2 நிதிசார் பகுப்பு ரீதியான விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 28,912 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாடு செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 165,140 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 136,228 ஆல் குறைவடைந்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா 111,127,345 ஆக விளைந்திருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 99,132,459 ஆகவும் விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா 11,994,886 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.4 வருமான முகாமைத்துவம்

#### 2.4.1 வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

சபையினால் சமர்பிக்கப்பட்டிருந்தவாறு மீளாய்வாண்டுக்கான மதிப்பிடப்பட்ட வருமானம், கிடைக்கப்பெற்ற உண்மையான வருமானம் மற்றும் நிலுவையாகவுள்ள வருமானம் என்பன பற்றிய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உண்மையான வருமானம் | 31 திசெம்பர் 2016 இலிருந்தவாறான திரண்டு வந்த நிலுவை வருமானம் |
|---|---|---|---|
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| வீதவரிகளும் வரிகளும் | 452 | 365 | - |
| வாடகைகளும் குத்தகைக் கட்டணங்களும் | 15,808 | 15,778 | 172 |
| உரிமக் கட்டணங்கள் | 1,296 | 1,461 | - |
| ஏனைய வருமானங்கள் | 13,396 | 23,581 | 22,877 |
| | 30,952 | 41,185 | 23,049 |

**2.4.2 தொலைத்தொடர்பு கோபுரத்துக்கான கட்டணங்கள்**

17.04.2009 திகதியிடப்பட்ட 1597/8 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபையின் எல்லைக்குள் அமைக்கப்பட்டிருந்த 11 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கல், பூர்வாங்கத்திட்டமிடல் அனுமதி, இசைவுச்சான்றிதழின் வழங்குகைகள், மேவுதல் அங்கீகாரம் ஆகிய நான்கு வகையான கட்டணங்களை மீளாய்வாண்டில் உரியவாறு அறவீடு செய்ய சபையால் நடவடிக்கைகளெவையும் மேற்கொள்ளப்பட்டிராமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய கட்டணங்களின் கூட்டு மொத்தப் பெறுமதியும் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவுமில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ பலவீனம்

16 எண்ணிக்கையான ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. இது சபை அலுவலகப் பணியாளர்களைப் பயன்படுத்தி வருமானப்பரிசோதகர் மற்றும் சந்தை மேற்பார்வையாளர்களுக்குரிய கடமைகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டிருப்பதால் சபையின் வினைத்திறனான வருமான சேகரிப்பு, திருப்திகரமான அலுவலகப் பணியாளர் சேவைகள் என்பன பாதிப்படைந்திருந்தமையும் அவதானிக்கப்பட்டிருந்தது.

### 3.2 கைவிடப்பட்ட மூலதன வேலைத்திட்டங்கள்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 40,750,000 பெறுமதியான 11 மூலதன வேலைத்திட்டங்கள் கணக்காய்வுப் பரிசீலனையின்போது கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது இதற்குரிய காரணங்களும் கணக்காய்வுக்கு அறியத்தரப்பட்டிருக்கவில்லை.

### 3.3 திண்மக்கழிவு முகாமைத்துவம்.

சபையின் எல்லைப்பரப்பிலிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூளங்களை எரித்தல் மற்றும் புதைத்தல் செயற்பாடுகளை மட்டுமே சபையால் மேற்கொள்வதேயன்றி கொம்பொஸ்ட் மற்றும் மீள்சுழற்சி செயற்திட்டங்களைக் கொண்ட திண்மக்கழிவு முகாமைத்துவத்தை செயற்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளெவையும் சபையினால் முன்னெடுக்கப்பட்டிருக்கப்படவில்லை.

## 4 கணக்களி பொறுப்பும் நல்லாட்சியும்

---

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்பட்டிராமையும் மதிப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமையாலேயுமே மீளாய்வாண்டிற்கான 08 வகையான மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே ரூபா 1,000 தொடக்கம் ரூபா 11,167,293 வரையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்தன.

### 4.2 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம்

---

நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் 09.06.2009ம் திகதிய கணக்காய்வு முகாமைத்துச் சுற்றுநிருப இல DMA/2009 (1) இன் பிரகாரம் சபையின் செற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டில் குறைந்தது 04 கணக்காய்வு முகாமைத்துவக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்திருக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அத்தகைய கூட்டமொன்று மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது.

## 5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

பின்வரும் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(i) உள்ளகக் கணக்காய்வு அலகினை செயற்படுத்தல்
(ii) வருமான சேகரிப்பு
(iii) நிலையான சொத்துக்கள்
(iv) கணக்கீடு
(v) ஆளணி வெற்றிடம்
(vi) நன்கொடை
(vii) நானாவித வைப்புக்கள்
(viii) பாதீட்டுக்கட்டுப்பாடு
(ix) பெறுகை நடைமுறை